# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் – 21


# ஆசரிப்புக் கூடாரம்



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# ஆசரிப்புக் கூடாரம்



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இப்போது நாம் பார்க்க இருக்கிற பாடமானது, பிதாவாகிய தேவன் வனாந்தரத்தில் மோசேயிடம் கட்டும்படி சொன்ன ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்ததாகும். இந்த ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டும்படியான தேவனுடைய வார்த்தைகளை நாம் வாசிப்போம்

**யாத்திராகமம் 25:8,9**

*'அவர்கள் நடுவிலே நாம் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக"*

இவ்விதமாக ஆசரிப்புக்கூடாரம் கட்டுவதற்கான மாதிரியையும், அது செய்யவேண்டிய விதம், எதினால், எந்தப் பொருட்களினால் அதைச் செய்யவேண்டும் அது எந்த அளவு இருக்கவேண்டும் என்பதை தேவன் மிக கண்டிப்பாக சொல்கிறார் -

**யாத்திராகமம் 25:40**

*'மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு"*

இந்த ஆசரிப்புக் கூடாரம் எப்பொருள் எங்கு எப்படி இருக்கவேண்டும் , அதை எப்படி பராமரிக்கவேண்டும், அவற்றை யாரெல்லாம் கையாளவேண்டும் என்ற விபரங்கள் யாத்திராகமம் 25ம் அதிகாரம் முதல் 40ம் அதிகாரம்வரை கூறப்பட்டுள்ளதை வாசித்து அறிந்துகொள்ளவும். இவ்வாறு இஸ்ரயேல் ஜனங்களை மோசே அறிவுறுத்தி, ஆசரிப்புக்கூடாரத்தை ஆயத்தப்படுத்தினதை வாசிக்கிறோம்.

**யாத்திராகமம் 39:43**

*'மோசே அந்த வேலைகளையெல்லாம் பார்த்தான். கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள்"*

இப்போது இந்த ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரயேலரின் மத்தியில் தயாராயிருந்ததை பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம் :

**எண்ணாகமம் 2:2**

*இஸ்ரயேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படி விருதாகிய தங்கள் கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப்போட்டு, ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளையமிறங்கக் கடவர்கள்"*

இஸ்ரயேலின் பன்னிரெண்டு கோத்திரத்தார் அனைவரும் தங்களுடைய கூடாரத்தை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு பக்கமும் அமைத்து பாளையம் இறங்கினார்கள். ஆசரிப்புக்கூடாரம் அவர்கள் மத்தியில் இருந்தது.

இப்போது இந்த ஆசரிப்புக் கூடாரம் எதைக்குறிக்கிறது? இதன் அர்த்தம் என்ன? என்று காணலாம்

**எபிரேயர் 8:5**

*'இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்தில் உள்ளவைகளின் சாயலுக்கு ஒத்திருக்கிறது. அப்படியே மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று கட்டளையிட்டார்"*

ஆம் சகோதர சகோதரிகளே, நாம் காணும் இந்த ஆசரிப்புக் கூடாரத்தை தேவன் பரலோகத்தில் உள்ளவைகளுக்கு ஒரு நிழலாகவும் காட்டுகிறார். இப்போது நாம் இந்த ஆசரிப்புக் கூடாரத்தில் வெவ்வேறு பாகங்கள் உள்ளதையும், எதற்கு அவை அடையாளமாக , அதாவது சாயலாக உள்ளது , அல்லது அதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன என்று காணலாம்.

**யாத்திராகமம் 27:9-19**

*'வாசஸ்தலத்துக்குப் பிரகாரத்தையும் உண்டுபண்ணுவாயாக. தெற்கே தென்திசைக்கு எதிரான பிரகாரத்துக்கு திரித்த மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட நூறுமுழ நீளமான தொங்கு திரைகள் இருக்கவேண்டும். அவைகளுக்கு வெண்கலத்தினாலே இருபது தூண்களும், இருபது பாதங்களும் இருக்கவேண்டும். தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும். அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கும் நூறு முழ நீளமான தொங்கு திரைகள் இருக்கவேண்டும். அவைகளுக்கு இருபது தூண்களும்,அவைகளுக்கு இருபது பாதங்களும் வெண்கலமாயிருக்கவேண்டும். தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும். பிரகாரத்தின் மேற்பக்கமான தூண்களும், அவைகளுக்குப் பத்துப் பாதங்களும் இருக்கவேண்டும். சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்தின் பிரகாரம் ஐம்பது முழ அகலமாயிருக்கவேண்டும். அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான தொங்கு திரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும். பிரகாரத்தின் வாசலுக்கு இளநீல நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் சித்திரத்தையல் வேலையாய்ச் செய்யப்பட்ட இருபதுமுழ நீளமான ஒரு தொங்கு திரையும் அதற்கு நாலு தூண்களும், அவைகளுக்கு நாலு பாதங்களும் இருக்கவேண்டும். சுற்றுப் பிரகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண் கட்டப்பட்டிருக்கவேண்டும். அவைகளின் கொக்கிகள் வெள்ளியினாலும் அவைகளின் பாதங்கள் வெண்கலத்தினாலும்*

*செய்யப்பட்டிருக்கவேண்டும். பிரகாரத்தின் நீளம் நூறு முழமும் இருபுறத்து அகலம் ஐம்பது ஐம்பது முழமும், உயரம் ஐந்து முழமுமாயிருப்பதாக, அதின் தொங்கல்கள் திரித்த மெல்லிய பஞ்சு நூலினால் செய்யப்பட்டு, அதின் தூண்களின் பாதங்கள் வெண்கலமாயிருக்கவேண்டும்"*

இங்கு வெளிப்புற மதில் கட்டுவது பற்றிய விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆசரிப்புக் கூடாரத்தின் சுவர் தொங்கு திரையினால் ஆனவை. இந்த தொங்கு திரைகள் ஒவ்வொரு 5முழ இடைவெளியில் வைக்கப்பட்டிருந்த தூண்களில் தொங்கவிடப்பட்டிருந்தது. நான்கு பக்கங்களிலும் மொத்தமாக 60 தூண்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தின் அளவுகளை நாம் கவனிக்கும்போது, வடக்குப் பக்கம் 100 முழமும்(150 அடி) தெற்கு பக்கம் 100 முழமும்(150 அடி), கிழக்கு பக்கம் 50 முழமும்(75 அடி) , மேற்குப் பக்கம் 50 முழமும்(75 அடி). இந்த சுற்று தொங்கு திரையின் உயரம் 5 முழமும்(71/2 அடி) இருக்கவேண்டும். இது ஒரு நபர் எட்டிப் பார்த்தாலும் காண முடியாத அளவு உயரமாயிருக்கிறது. இவற்றின் உள்பகுதிதான் பிரகாரம் எனப்படுவது.

மேலும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் , அதின் கிழக்குப் பக்கத்தில் மாத்திரம் காணப்படுகிறது. இது 20 முழமும்(30அடி), இளநீல நூல் மற்றும் இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும், மெல்லிய பஞ்சு நூலாலும் சித்திரத் தையல் வேலையாய்ச் செய்யப்பட்டிருந்தது. (வசனம் - 16ல் காண்க) இது ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்புற விபரங்களாகும்.

இவையனைத்தும் 'பரலோகத்தில் உள்ளவைகளுக்கு" நிழலாக இருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து வெளியே சிறிது தொலைவில் பாளையத்தில் உள்ள இஸ்ரயேலர்.. உலக ஜனங்களைக் குறிக்கும். இஸ்ரயேலருக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் உயரமான மதில்(71∴2 அடி) அவநம்பிக்கைக்கு அடையாளமாக இருக்கிறது. இது பின்வருவனவற்றை அடையாளப்படுத்துகிறது.

**1கொரிந்தியர் 2:14**

*'ஜென்ம சுபாவ மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்"*

இவ்விதமாக, இவ்வுலகம் பாளையத்தின் நிலையாகிய அவிசுவாசமும், தேவனுடைய காரியங்களுக்கு குருடாக்கப்பட்ட நிலையிலும் உள்ளது. இப்பொழுது ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் ஒருவர், அதன் கிழக்குப் பக்கத்திலுள்ள வாசலுக்கு வரவேண்டும். இந்த வாசல் எதைக் குறிக்கிறது?

**யோவான் 10:9 / 14:6**

*'நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால்..."*
*'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.."*

ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நுழையப் பயன்படும் 'வாசல்"அல்லது 'கதவு" அல்லது 'வழி" என்பது இயேசுகிறிஸ்துவையும், அவர்மேல் வைக்கும் விசுவாசத்தின்மூலமே ஒருவன் தேவனுடைய

காரியங்களுக்குள் பிரவேசிக்க முடியும் என்பதைக் குறிக்கிறது.

**மெல்லிய(வெள்ளை) பஞ்சு நூல் தொங்கு திரை**

இது எதைக்காட்டுகிறது என்றால், பரிசுத்தமும், கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் நீதியையும் காட்டுகிறது. வாசல் திரையில் இருந்த பல்வேறு நிறங்களில் உள்ள நூல்கள்(ஸ்பன்) எதைக்குறிக்கிறது என்றால், இயேசுகிறிஸ்துவின் குணலட்சணங்களைக் காட்டுகிறது

**இளநீலம்** - இயேசு பிதாவின்மேல் வைத்திருந்த விசுவாசத்தை சுட்டிக் காட்டுகிறது

**இரத்தாம்பரம்** - இவை இயேசுவின் இரத்தத்தினால் மீட்கும் பொருளைத் தந்து உலக இரட்சகராக ஆன இராஜரீகத்தைக் குறிக்கிறது

**சிவப்பு** (சிவப்பும், நீலமும் கலந்த கலவை - பர்ப்பிள்) இவை இயேசுவின் தகுதியைக் காட்டுகிறது. அது அவர் இராஜாதிஇராஜாவாக இருப்பதையும், இருப்பதற்குத் தகுதிபெற்றதையும் காட்டுகிறது.

**முழு உலக ஜனங்கள்** - இஸ்ரயேலர்கள் தங்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கு சில இடைவெளிக்கு அப்பால் இருந்தது எதைக் காட்டுகிறது என்றால், முழு உலக ஜனங்கள் தேவனை அறியும் அறிவுக்கு அப்பால் அதாவது வெளியே இருப்பதைக் காட்டுகிறது.

இப்போது நாம் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வாசல் வழியாக உள்ளே பிரவேசிக்கலாம்.

***யாத்திராகமம் 40:29***

*'தகனபலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து, அதின்மேல் சர்வாங்க தகனபலியையும், போஜனபலியையும் செலுத்தினான்"*

## வெண்கல பலிபீடம்



இந்த பலிபீடத்தின் முழுவிபரம் மற்றும் செய்முறை, யாத்திராகமம் 27:1-8 வரையுள்ள வசனப் பகுதிகளை ஒப்பிட்டுப் பார்க்கவும். நாம் உள்ளே நுழைந்தவுடன் நம் கண்ணில்படுவது வெண்கல பலிபீடம் அல்லது தகன பலிபீடம் . இது மரத்தினால் செய்யப்பட்டு, வெண்கலத் தகட்டினால் மூடப்பட்டுள்ளது. இவற்றின்நீளம் 7 1.·.2 அடியும், அகலம் 71.·.2 அடியும், உயரம் 14.2அடியும் கொண்டது. இவற்றில் தொடர்ந்து பலிகள் எரிந்துகொண்டே இருக்கும்.

**இந்த பலிபீடம் எதற்கு அடையாளம்?**

இந்த பலிபீடம் என்றைக்கும் மாற்றமுடியாத இயேசுவின் ஈடுபலியை காட்டுகிறது. அதாவது இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை இவ்வுலகத்தின் இரட்சிப்புக்காக சிலுவையில் மரித்ததை காண்பிக்கிறது

***1தீமோத்தேயு 2:5,6***

*'தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, எல்லாரையும்*

*மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்றகாலங்களில் விளங்கி வருகிறது"*

இந்த வெண்கல பலிபீடத்தைக் கடந்து ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளாக முன்னேறிச் செல்லும்போது, அடுத்து காண்பது,

## தண்ணீர்த் தொட்டி

இந்த தண்ணீர்த்தொட்டியைப் பற்றிய விபரங்களை பின்வரும் வசனங்களில் வாசிக்கிறோம்.

*யாத்திராகமம் 30:17-21 / 40:30-32*

*'பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி - கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதன் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. அதனிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள். அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும், கர்த்தருக்குத் தகனத்தை கொடுக்கவும் பலிபீடத்தினிடத்தில் ஆராதனை செய்யவும் சேரும்போதும், அவர்கள் சாகாதபடிக்கு தண்ணீரினால் தங்களைக் கழுவக் கடவர்கள். இது தலைமுறைதோறும் அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்".*

*'அவன் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே தொட்டியை வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்த்தான். இவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள். கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே , அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கிறபோதும், பலிபீடத்தண்டையில் சேருகிறபோதும், அவர்கள் கழுவிக்கொள்ளுவார்கள்"*



இந்த தண்ணீர்த்தொட்டியானது, வெண்கல பலிபீடத்திற்கும், ஆசரிப்புக் கூடாரத்தின் உட்பகுதிக்கும் இடையே பிரகாரம் என்றழைக்கப்படும் இடத்தில் உள்ளது. இது வெண்கலத்தால் செய்யப்பட்டதாகவும், இதிலுள்ள தண்ணீரினால் ஆசாரியர் மற்றும் லேவியர் தங்களுடைய கை, கால்களை சுத்திகரிப்பது வழக்கம். இதை செய்யத் தவறினால் சாவது நிச்சயம்.

இதன் அர்த்தம் என்ன? இது எதை உணர்த்துகிறது?

வெண்கலத் தொட்டி, வேதாகமத்திற்கும், தண்ணீர் தேவனுடைய வசனத்திற்கும் அடையாளமாக உள்ளது. அதாவது முதலில் அடிப்படை சத்தியத்தில் வசனத்தைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது அறிந்து புரிந்துகொள்ளுதல்

**எபேசியர் 5:26**

*‘தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்..”*

இதன்விளைவாக நம்மில் உள்ள பாவங்கள் சிறிது சிறிதாக விட்டு விலகுதல் அல்லது பாவத்தை வெறுத்து செயல்படுதல் போன்றவை நிகழ்கின்றன.

உதாரணமாக, குடிப்பழக்கத்தை விட்டுவிடுதல், புகை பிடித்தல், சூதாட்டம், கெட்ட வார்த்தைகள் பேசுவதை விட்டுவிடுதல், உலகப்பிரகாரமான சினிமா, உலகப் பிரகாரமான விருந்துகள் போன்றவற்றிலிருந்து விலகி , பரலோக பாதையைப் பின்பற்றுதல் நடைபெறுகின்றது.

இந்த வெண்கல பலிபீடமும், வெண்கலத் தொட்டியும் இருக்கும் இடம் பிரகாரம் ஆகும்.

**பிரகாரம்** : இந்த பிரகாரம் எதைக் காட்டுகிறது என்றால், ஒவ்வொரு கிறிஸ்தவ வளர்ச்சியின் முதல்படியைக் காட்டுகிறது. அதாவது அழைக்கப்பட்ட நிலைமையைக் காட்டுகிறது.(மத்தேயு 22:14). இவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசிகள். ஆக இந்த வெண்கல பலிபீடமும் , வெண்கலத் தொட்டியும் எதைக் காட்டுகிறது என்றால், இயேசுவின் ஈடுபலியையும், அதன்மேல் வைக்கும் விசுவாசத்தையும் , வேதாகமத்தில் படித்து அறிந்துகொள்ளுதலையும் காட்டுகிறது. இவர்களுக்கு நிழலாக லேவியர்கள் காண்பிக்கப்பட்டிருக்கின்றனர் (எண்ணாகமம் 3:5-10).லேவியர்கள் பிரகாரம் வரை மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.

இவர்கள் விசுவாசிகளுக்கு அடையாளம். ஆசாரியன் மட்டும் பரிசுத்தஸ்தலத்தில் நுழைய அனுமதிக்கப்பட்டிருப்பது விசுவாசியின் 2வது படியான கிறிஸ்தவ வாழ்க்கையின் முன்னேற்றம் அதாவது தெரிந்துகொள்ளப்பட்ட நிலை அல்லது இயேசுவைப் பின்பற்றுகிற நிலை. இவர்கள் தங்கள் யோசனைகளை, சித்தங்களை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்து, தன்னைத் தான் வெறுத்தலாகும்

**மத்தேயு 16:24**

*‘அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்”*

தன்னை முழுவதும் உடன்படிக்கையின் மூலம் தேவனுக்கு சேவை செய்ய ஒப்புக்கொடுப்பவர்கள் (இதனைப்பற்றி நாம் கிறிஸ்துவின் சபை வகுப்புக்களில் பார்த்தோம்).

இப்போது நாம் ஆசரிப்புக் கூடாரத்தின் முக்கியமான பகுதிக்குச் செல்வோம்.



## பரிசுத்த ஸ்தலம்

பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லவேண்டுமானால், முதலாம் திரையைக் கடந்துதான் செல்லவேண்டும்.

**யாத்திராகமம் 26:36**

*‘இளநீலநூலும் இரத்தாம்பர நூலும், திரித்த பஞ்சு நூலுமாகிய இவற்றால் சித்திரத்தையல் வேலையான ஒரு*

*தொங்கு திரையும் கூடாரத்தின் வாசலுக்கு உண்டாக்கி.."*

இது பரிசுத்தஸ்தலத்துக்கான நுழை வாசலாகும். ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலைப்போன்று, இந்தத் திரை நீலம், சிவப்பு, இரத்தாம்பரம் ஆகிய நிறங்களில் சித்திரத் தையல் வேலை செய்யப்பட்டுள்ளது. இதன் வழியாக லேவியர்கள் உள்ளே நுழையக் கூடாது. இதன் பொருளாக உள்ள கிறிஸ்தவ விசுவாசிகள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியாது. ஆசாரியர்களாக முன்னேறின கிறிஸ்துவைப் பின்பற்றுகிற தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மட்டுமே போகமுடியும். இவை எதைக் காட்டுகிறதென்றால், விசுவாசிகள் பின்பற்றுகிறவர்களாக மாறுவதை - அதாவது 'பலியின் உடன்படிக்கை"யின்மூலம் அழைக்கப்பட்டவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக மாறுவதைக் காட்டுகிறது.

**சங்கீதம் 50:5**

*'பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்.."*

இந்த இரகசியமான பலியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக ஞானஸ்நானம் உள்ளதாக வேதத்தில் கூறப்பட்டுள்ளது

**சங்கீதம் 25:14**

*'கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"*

இங்குதான் ரோமர் 6:3 மற்றும் கொலோசெயர் 3:3ல் நாம் வாசிக்கிற , சுயத்தை வெறுத்து, தன்னையே முழுவதும் ஒப்புக்கொடுத்து, அதன்மூலம் உலகிற்கு மரித்தல் நிறைவேறுகிறது. மேற்கொண்டு நாம் பரிசுத்த ஸ்தலத்தில் நுழைவதற்குமுன் இவற்றின் அளவு என்னவென்று பார்த்தால், 30 அடி நீளமும், 15அடி அகலமும் கொண்டதுதான் இந்த பரிசுத்த ஸ்தலம்.

இங்கு நாம் நுழைந்தவுடன் நம் கண்ணில்படுவது வலதுபுறத்தின் வடக்குப் பகுதியிலுள்ள

## சமூகத்து அப்பமுள்ள மேஜை



இதைக் குறித்த விபரங்களை பின்வருமாறு வாசிக்கிறோம்.

**லேவி 24:5,6**

*'அன்றியும் நீ மெல்லிய மாவை எடுத்து. அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக. ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கு மாவினால் செய்யப்படவேண்டும். அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கிலும் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைத்து.."*

இது சித்தீம் மரத்தினால் செய்யப்பட்டு, பொன் தகட்டினால் மூடப்பட்ட மேஜையாகும்(யாத் 37:10-16வாசித்தறியவும்). இதன்மீது 12 புளிப்பில்லாத அப்பங்கள் ஆறுஒரு பக்கமும் மற்றொரு பக்கத்தில் ஆறுமாக அடுக்கப்பட்டிருக்கும். இது பரிசுத்தமான புளிப்பில்லா அப்பமாகும். இவற்றை 7 நாளுக்கு ஒருமுறை மாற்றவேண்டும்.

**இவைகளின் விளக்கம் என்ன?**

இந்த அப்பம் தேவனுடைய வார்த்தையாகிய வேதத்திற்கு அடையாளமாகும். இதுவே ஆவிக்குரிய ஆகாரம். இரண்டு வரிசை ஆறு ∴ஆறு என்பது வேதாகமத்தின் 66 புத்தகங்களைக் குறிக்கிறது. இவற்றை ஆசாரியர்கள் மாத்திரம் புசிக்கவேண்டும் என்பது, இந்த ஆவிக்குரிய உணவாகிய சத்தியங்களை ஆசாரியர்கள் மட்டும்தான் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்கமுடியும்.

அதாவது, தேவனுக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்த ஜனங்களாகிய தேவ பிள்ளைகளை காட்டுகிறது. இந்த புளிப்பில்லாத அப்பம் - சுத்தமான சத்தியத்தையும், ஏழு நாளுக்கு ஒருமுறை மாற்றப்படுவது புதிய புதிய சத்தியங்களாக தேவ பிள்ளைகள் கூடுகையில் கிடைப்பதாகும்.



## பொன் குத்து விளக்கு

இதைக் குறித்த விபரங்களை வாசிப்போம்.

***யாத்திராகமம் 37:17-24***

*'குத்துவிளக்கையும் பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய் உண்டாக்கினான். அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. குத்துவிளக்கின் ஒருபக்கத்தில் மூன்று கிளைகளும், அதின் மறுபக்கத்தில் மூன்று கிளைகளுமாக அதின் பக்கங்களில் ஆறு கிளைகள் செய்யப்பட்டது. ஒவ்வொரு கிளையிலே வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான மூன்று மொக்குகளும், ஒரு பழமும் ஒரு பூவும் இருந்தது. குத்துவிளக்கில் செய்யப்பட்ட ஆறு கிளைகளிலும் அப்படியே இருந்தது. விளக்குத்தண்டில் வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான நாலு மொக்குகளும் பழங்களும் பூக்களும் இருந்தது. அதில் செய்யப்பட்ட இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும் இருந்தது. விளக்குத்தண்டில் செய்யப்பட்ட ஆறு கிளைகளுக்கும் அப்படியே இருந்தது. அவைகளின் பழங்களும் அவைகளின் கிளைகளும் பசும்பொன்னினால் ஒரே அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டது. அதின் ஏழு அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும் பசும்பொன்னினால் செய்தான். அதையும் அதின் பணிமூட்டுகள் யாவையும் ஒரு தாலந்து பசும்பொன்னினால் செய்தான்"*

இங்கு பொன் குத்துவிளக்கு மற்றும் அது செய்யும் விதம் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த மேஜைக்கு எதிரே அதாவது பரிசுத்த ஸ்தலத்தின் இடதுபுறத்தில் தெற்கே பொன்னினால் செய்யப்பட்ட எரிகிற ஏழு அகல்கள் கொண்ட பொன் குத்துவிளக்கு உள்ளது. சூரியஒளி உள்ளே வராதபடி முழுவதும் மூடப்பட்டுள்ளதால், பரிசுத்தஸ்தலத்தில் இந்த வெளிச்சம் மட்டுமே உள்ளது.

அந்த குத்துவிளக்கு ஒரே தண்டினால் செய்யப்பட்டதாகும். இந்தத் தண்டில் வலதுபுறம் மூன்று கிளைகளாகவும், இடதுபுறம் மூன்று கிளைகளாகவும், தண்டின்மேல் பகுதியில் ஒன்றுமாக மொத்தம் 7 அகல்கள் விசித்திரமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விநோதமான கலைநயத்துடன் வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான மொக்குகளுடன்.. ஒரு பழம், ஒரு பூ என்ற ரீதியில்

வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த எரிகிற பொன்குத்து விளக்குகளுக்கு பிரதான ஆசாரியன் தாமே எண்ணெய் வார்த்து, திரி கத்திரிக்கப்பட்டு , பராமரிக்கவேண்டும். இவ்விதமாக இவ்விளக்கின் வெளிச்சம் அவருடைய முழு கவனத்திற்கும். பராமரிப்பிற்கும் உட்பட்டதாக இருக்கிறது.

**இவைகளின் விளக்கம் என்ன?**

பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற இந்த 'பொன்குத்து விளக்கு" அதன் வெளிச்சம்,'பரிசுத்தமான நிலையில் அல்லது அர்ப்பணிக்கப்பட்ட நிலையில் - போதகரைப் பின்பற்றுகிறவராக, 'தெரிந்துகொள்ளப்பட்ட" நிலையில் இருக்கும் ஒரு கிறிஸ்தவனுக்கு விசேஷமானதாக இருப்பதை அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார்.

***1பேதுரு 2:9***

*'நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமானஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்தஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்"*

ஆம். இந்த அகல்களில் உள்ள எண்ணெயானது பரிசுத்தஆவியைக் குறிக்கிறது. அதிலிருந்து வரக்கூடிய வெளிச்சமானது பரிசுத்தஆவியின் மூலம் பெறப்படும் சத்திய வெளிச்சத்தை(1கொரிந்தியர் 2:12,13) குறிக்கிறதை வாசிக்கிறோம்.

***யோவான் 16:13***

*'சத்திய ஆவியாகிய அவர்வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்"*

தேவனுடைய வார்த்தைகளில் அடையாளங்கள், நிழல்கள், உவமைகள் மூலம் சொல்லப்பட்டிருக்கும் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தையும், வரவிருக்கின்ற காரியங்களைப் பற்றின தீர்க்கதரிசனங்களையும் ஆழமாகப் புரிந்துகொள்வதைக் குறிக்கிறது. அதேசமயம், பிரகாரத்திலிருக்கும் லேவியர்கள் இந்த வெளிச்சத்தை காணவோ, அறியவோ முடியாது. மேலும் பிரதான ஆசாரியன் ஒருவராக இந்த பொன்குத்துவிளக்கை பராமரிப்பது, நம் கர்த்தராகிய இயேசு பிரதான ஆசாரியராகவும், சபைக்கு தலைவராகவும் இருந்து, சத்திய வெளிச்சம் தந்து கண்காணிப்பதை நாம் வாசிக்கிறோம் -

***வெளிப்படுத்தல் 1:13***

*'அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டோம்"*

அடுத்து நாம் மகா பரிசுத்தஸ்தலம் போகும் முன், அதின் வாசலுக்கு முன் ஒரு சிறிய தூபபீடம் உள்ளதைக் காணலாம்.



## தூப பீடம் / பொற்பீடம்

இதைக் குறித்த விபரங்களை நாம் வாசிக்கையில்,

***யாத்திராகமம் 30:1-6***

*'தூபங் காட்டுகிறதற்கு ஒரு தூப பீடத்தையும் சீத்திம் மரத்தினால் உண்டாக்குவாயாக.*

*அது ஒரு முழ நீளமும் ஒருமுழ அகலமுமான சதுரமும், இரண்டு முழ உயரமுமாய் இருக்கவேண்டும். . சாட்சிப் பெட்டிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கும், நான் உன்னைச் சந்திக்கும் இடமாகிய சாட்சி சந்நிதியின்மேலுள்ள கிருபாசனத்துக்கும் முன்பாக அதை வைக்கக்கடவாய்"*

இந்த பொற்பீடத்தில், வெளியே உள்ள பலிபீடத்திலிருந்து எடுத்த நெருப்புத் துண்டை போட்டு, அதில் தூப வர்க்கத்தை இட்டு, புகை எழுப்பவேண்டும். அந்த புகை சுகந்த வாசனையாக பரிசுத்த ஸ்தலத்தை நிரப்பி, பின்பு திரையைக் கடந்து, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்கிறது. இவை உடன் பரிசுத்தவான்கள் அங்கீகரிப்பதையும், பிதாவாகிய தேவன் அங்கீகரிப்பதையும் காண்பிக்கிறது.

இவை தேவனுடன் உடன்படிக்கை செய்த பரிசுத்தவான்களின் 'அனுதின பலியாகும்" . ஒரு கை நிறைய தூபவர்க்கமும், நெருப்புத்துண்டும் இந்த பரிசுத்தவான்கள் உலகத்தாரால் வரும் துன்பங்களை இடறல்களை தங்களில் சகித்து, தங்களின் முழு இருதயத்தோடும் முன்னேறிச் செல்வதாகும்.

**எபேசியர் 5: 2**

*'கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்"*

அடுத்து நாம் பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும் திரை பற்றி அறிந்து கொள்ளப்போகிறோம்.

## திரை

**யாத்திராகமம் 26:31-33**




*'இளநீல நூலும், இரத்தாம்பரநூலும், சிவப்பு நூலும் , திரித்த மெல்லிய பஞ்சுநூலுமான இவற்றால் ஒரு திரைச்சீலையை உண்டுபண்ணக் கடவாய். அதிலே சித்திரவேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்படவேண்டும். சீத்திம் மரத்தினால் செய்து, பொன்தகட்டால் மூடப்பட்ட நாலு தூண்களிலே அதைத் தொங்கவிடு, அந்தத் தூண்கள் நாலு வெள்ளிப் பாதங்கள்மேல் நிற்கவும், அவைகளின் கொக்கிகள் பொன்னினால் செய்யப்படவும் வேண்டும். கொக்கிகளின்கீழே அந்தத் திரைச்சீலையைத் தொங்கவிட்டு சாட்சிப்பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைக்கக்கடவாய். அந்தத் திரைச்சீலை பரிசுத்தஸ்தலத்திற்கும் மகா பரிசுத்தஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும்"*

இது ஆசரிப்புக் கூடாரத்தில் காணப்படும் இரண்டாவது 'திரை"யாகும். இதன் வழியாகவே ஒருவர் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கமுடியும். இளநீல நூலும், இரத்தாம்பர நூலும் சிவப்பு நூலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலுமாகிய இவற்றால் ஒரு திரை சீலையை உண்டுபண்ணி, அதிலே விசித்திர வேலையில் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்படவேண்டும். இந்த திரைச் சீலை மிக தடியாகவும், மிக கனமாகவும் இருக்கும். இவை பரிசுத்தஸ்தலத்தில் உள்ள ஆசாரியர்களின் கண்களுக்கு மட்டும் தெரியும். இந்த திரைச்சீலைதான் எருசலேமின் தேவாலயத்திலிருந்த திரைச்சீலையாகும்.

இது தான் இயேசுவின் மரணத்தின்போது மேலிருந்து கீழாக கிழிந்தது(மத்தேயு 23:51, லூக்கா 23:45). இந்த திரையைக் கடந்துதான் வருடத்திற்கு ஒருமுறை பிரதான ஆசாரியன் பாவநிவாரண பலியாக மிருகங்களின் இரத்தத்தை கிருபாசனத்தின்மேல் தெளிப்பார்.

**இதன் அர்த்தம் என்ன?**

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிறங்கள் - 'வாசல்", 'முதலாம் திரை", மற்றும் 'இரண்டாம் திரை" ஆகிய மூன்று திரைகளிலும் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம். திரைச்சீலையில் உள்ள நிறங்கள் எதைக் குறிக்கிறதெனில்,

நீலம் - விசுவாசத்திற்கு அடையாளமாகும்

இரத்தாம்பரம் - இராஜரீகத்திற்கு அடையாளமாகும்

சிவப்பு (சிவப்பும் நீலமும் கலந்த பர்ப்பிள்)-இரட்சகராகிய இயேசுவின் ஈடுபலியின் இரத்தத்திற்கு அடையாளம்

திரித்த மெல்லிய (வெள்ளை) பஞ்சு - கர்த்தருடைய நீதியைக் காட்டுகிறது


*'அவர் பரிசுத்தமுள்ளவரும், பாவிகளை நேசித்து, பாவத்திற்கு விலகினவருமாக இருந்தார்"*

கேரூபீன்கள் - தேவனுடைய சுபாவத்தில் அன்பு மற்றும் வல்லமையைக் குறிக்கிறது.

பொதுவாக இந்த நிறங்கள் 3 திரைச்சீலைகளிலும் உள்ளது. இந்த மூன்றிலும் இயேசு ஏன் காண்பிக்கப்படவேண்டும்? இது எதைக் காட்டுகிறது என அவரது வார்த்தைகளிலிருந்து அறியலாம்

**யோவான் 14:6**

*'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.*



கிறிஸ்தவ வளர்ச்சியில் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் இயேசுவே முன்னின்று வழிநடத்துகிறார்.

முதல்திரை - விசுவாசி நிலை - நானே வழி, வாசல்

2ம் திரை - பின்பற்றுபவராகும் நிலை - சத்தியம்

3ம் திரை - முதலாம் உயிர்த்தெழுதலில் ஜீவனடைதல்

- ஜீவன். மகா பரிசுத்த ஸ்தலத்தின் திரையைக் கடந்து பரலோகத்திற்குசெல்லும்வரை

வழிநடத்துவதை நாம் காண்கிறோம்.

இதில் பிரவேசிப்பவர்கள் யாவரும் இயேசுகிறிஸ்துவினால் நடத்தப்படுகிற கிறிஸ்தவர்கள் ஆவர்.

1. அழைக்கப்பட்ட நிலை
2. தெரிந்துகொள்ளப்பட்ட நிலை
3. உண்மையுள்ளவர்கள் நிலை. இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்வார்கள்.

***யோவான் 6:44***

*‘என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் ஒருவனும் என்னிடத்தில் வரமாட்டான். கடைசிநாளில் அவனை நான் உயிர்ப்பிப்பேன்”*

இந்த திரைவழியாகவே பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகவேண்டும். இவை ஒவ்வொரு பரிசுத்தவான்களும் தங்களின் மாம்ச சரீரத்தின் மரணத்தைக் காட்டுகிறது. இதைத் தான் பவுல் இப்படிச் சொல்கிறார்.

***1கொரிந்தியர் 15:50,51***

*‘சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதில்லை. இதோ. ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன், நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்”*

## மகாபரிசுத்த ஸ்தலம்

இப்போது நாம் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்போம். இவைதான் ஆசரிப்புக் கூடாரத்தின் மிக முக்கியமான இடமாகும். இதை பரிசுத்தத்தில் பரிசுத்தம் என அழைக்கலாம். இவற்றின் அளவு 15 அடிநீளம், 15 அடி அகலம், 15 அடி உயரமாகும்.

இதன்உள்ளே ஒரே ஒரு பெட்டி செவ்வக வடிவில் மரத்தினால் செய்யப்பட்டு அவற்றை பொன்தகட்டினால் மூடப்பட்டிருந்தது. இவற்றின்பெயர் உடன்படிக்கைப்பெட்டி எனப்படும்.

## உடன்படிக்கைப் பெட்டி

***எபிரேயர் 9:3-5 / யாத்திராகமம் 37:1-9***

*‘இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. அதிலே பொன்னால் செய்த தூபகலசமும், முழுவதும் பொற்தகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன. அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தது. அதற்கு மேலே*



*மகிமையுள்ள கேரூபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன. ‘பெசலெயேல் சீத்திம் மரத்தினால் பெட்டியை உண்டுபண்ணினான். அதின் நீளம் இரண்டரை முழமும் அதின் அகலம் ஒன்றரை முழமும் அதின் உயரம் ஒன்றரை முழமுமானது. அதை உள்ளும் புறமும் பசும்பொன் தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டாக்கி..”*

இந்தப் பெட்டியில் மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரமும், ஆரோனின் துளிர்த்தகோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன.

இந்தப் பெட்டியை செய்தது பெசலேயேல். இந்தப் பெட்டியின் அளவு 3.34 அடிநீளமும், 2.4 அடி உயரமும் கொண்டது. இவற்றின் உள்ளும் புறமும் பொன்தகட்டினால் மூடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கைப் பெட்டியின் மூடி இந்த பெட்டியின் பரப்பளவின்படி (செவ்வக வடிவில்) நல்ல பருமனான தங்கத்தினால் ஆனது.

அதே தங்க பலகைளின்மேல் தளத்தில் அதே தங்கத்தினால் (அந்த தங்க பலகையில் சேர்ந்தவாறே) இரண்டு கேரூபீன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவைகள் தங்கள் இரண்டு சிறகுகளை விரித்தவாறு மேல்நோக்கி பறக்க தயார்நிலையில் இருப்பதுபோல் இந்த கிருபாசனத்தின் மேல்தான் பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளில் பலிகளின் இரத்தத்தை தெளிப்பார்கள். இந்த உடன்படிக்கைப் பெட்டியில் மூன்று பொருள்கள் இருந்தன(எபிரேயர் 9:4).



### 1. மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரம்

**யாத்திராகமம் 16:32-34**

*‘அப்பொழுது மோசே - கர்த்தர் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால், நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, வனாந்தரத்தில் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியார் பார்க்கும்படிக்கு, அவர்களுக்காக அதைக் காப்பதற்கு அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்கவேண்டும் என்றான்”*

### 2. ஆரோனின் துளிர்த்த கோல்



***எண்ணாகமம் 31:26***

*‘நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள் . அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும்”*



### 3. பத்துக் கற்பனையின் பலகைகள்

***உபாகமம் 31:26***

*’நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள். அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும்”*

மேலும், இந்த கிருபாசனத்திலும் இரண்டு கேரூபீன்களின் மத்தியிலிருந்து 'ஷெகின்னா மகிமை" என்றழைக்கப்படும் அபூர்வமான ஒளி காணப்படுகிறது.

இவைகள் எதை அடையாளமாக காட்டுகிறது?

நாம் அறிந்தவாறு, மகா பரிசுத்தஸ்தலம் - பரலோகத்திற்கு அடையாளமாயிருக்கிறது. மேலும், இயேசுகிறிஸ்து கடைசியாக அடைந்த ஆசீர்வாதத்தையும் காட்டுகிறது. அப்படியே கிறிஸ்து இயேசுவின் சபையாரும் இந்த ஆசீர்வாதத்தில் கிறிஸ்துவோடு, பிதாவின் மகிமையில் இருப்பார்கள்.

**உடன்படிக்கையின் பெட்டி எதைக் குறிக்கும்?**

இது காணக்கூடாத பிதாவாகிய தேவனுடைய தெய்வீக சுபாவத்திற்கு அடையாளம். பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் பின்வருவனவற்றைக் குறிக்கிறது:

உடன்படிக்கைப்பெட்டி - இது தேவனுடைய குணலட்சணமாகிய ஞானத்தைக் குறிக்கிறது. தேவனுடைய ஞானமானது, மாம்ச சரீரத்தில் வந்த இயேசுவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கைப் பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் பின்வருவனவற்றைக் குறிக்கிறது :

*ரோமர் 16:25 / எபேசியர் 3:6*

*'ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான.."*

*'இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை"*

இது இயேசுவைப் பற்றின மாபெரும் இரகசியமாகும். இயேசு மற்றும்.. அவருக்குள் இருக்கிற 1,44,000 சபை அங்கங்களைக் குறிக்கும். இந்த உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருக்கிற மூன்று பொருட்களும், முதலாவது இயேசுவினிடத்திலும்

பின்பு அவருக்குள் மறைந்திருக்கிற சபையினிடத்திலும் காணப்படுகிற குணலட்சணங்களைக் குறிக்கும்

**ஆரோனின் துளிர்த்தகோல்** - இராஜரீகமான ஆசாரிய ஊழியத்திற்கு தேவன் கிறிஸ்துவை தெரிந்துகொண்டதைக் குறிக்கும்

**முதலாவது இயேசு** : *எபிரேயர் 5:6* *'அப்படியே வேறொரு இடத்திலும் நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார்"*

**பின்பு சபை** : *1பேதுரு 2:9* - *'நீங்களோ உங்களை அந்தகாரத்திலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்"*

**நியாயப்பிரமாணப் பலகைகள்** - தேவனால் நியமிக்கப்பட்ட நீதிபதியாக கிறிஸ்து இருப்பதை

குறிக்கிறது

**முதலில் இயேசு** : அப்போஸ்தலர் 17:31 *அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றார்"*

**பின்பு சபை** : 1கொரிந்தியர் 6: 2 *'பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா?"*

**மன்னாவின் பொற்பாத்திரம்** : இந்த மன்னாவானது இஸ்ரயேலர் உண்டு, மறுநாளில் கெட்டுப்போன மன்னாவைப் போல் இல்லாமல், கெட்டுப்போகாததாக இருந்தது. இந்த அழிவில்லாத விசேஷத்தன்மையுள்ள மன்னாவானது அழியாத ஜீவனாகிய - தெய்வீக நிலையைக் குறிக்கிறது.

**முதலில் இயேசு** : வெளிப்படுத்தல் 1:18 - *'மரித்தேன் ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்"*

**பின்பு சபை** : 2பேதுரு 1:4 - *'இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது"*

மேலும் உடன்படிக்கைப்பெட்டியை மூடியுள்ள தடிமனான மூடி, கிறிஸ்துவுக்கு தலையாக தேவன் இருப்பதைக் குறிக்கிறது(1கொரிந் 11:3).

**இறுதியாக இரு கேருபீன்களும் எதைக் குறிக்கின்றனர்?**

தேவனுடைய இரு குணலட்சணங்களாகிய அன்பு மற்றும் வல்லமையைக் குறிக்கும்.




இவ்விரண்டும் கிருபாசனத்தை நோக்கியிருப்பதும், பறப்பதற்கு ஆயத்தமாயிருப்பதும் எதைக் குறிக்கும்? கிறிஸ்துவின் பலியின்மூலம் பாவநிவாரணதிட்டம் நிறைவேறும்வரைக்கும் தேவனுடைய அன்பு மற்றும் வல்லமை வெளிப்படக் காத்திருப்பதைக் குறிக்கும்.

இறுதியாக, **'ஷெகின்னா மகிமையானது"** பரலோகப் பிதாவின் தெய்வீகப் பிரசன்னத்திற்கு அடையாளமாக இருந்து.. தேவனை இஸ்ரயேலர் ஸ்தோத்தரிப்பது போல ..

***ஏசாயா 37:16***

*'சேனைகளின் கர்த்தாவே, கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரயேலின் தேவனே"*

இங்கு இரண்டு கேருபீன்களுக்கு மத்தியில் காணப்பட்ட 'வெளிச்சத்தை" குறிப்பதாக இருக்கிறது.

இறுதியாக, உடன்படிக்கைப் பெட்டி முழுவதுமாக பார்க்கையில், அது தெய்வீக குடும்பத்திற்குள்


காணப்படும் ‘ஒருமைப்பாட்டை” குறிப்பதைக் காணலாம். இதை இயேசு தம் வார்த்தைகளில் விவரிக்கிறார் :

**யோவான் 17:21**

*‘அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்”*

இவ்விதமாக சபை பூர்த்தியடைந்தபின், மனுஷர்களிடத்தில் தேவனுடைய வாசஸ்தலம் இருக்கும். அவர்களிடத்திலே தேவன் வாசமாயிருப்பார். முழு மனுக்குலமும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்' **(வெளிப்படுத்தல் 21:3).**

**தேவன் தாமே அவரது சத்தத்தைக் கேட்டு கீழ்ப்படிபவர்களாக நம்மை வழிநடத்துவாராக ஆமென்.**



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/biblereserch/

# Tabernacle

## The Structure and Dimensions of the Tabernacle









